ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2419/ 03 - 2025 ජනවාරි මස 15 වැනි බදාදා - 2025.01.15**

2419/03 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) மாகாண சபை

## மாகாண சபை அறிவித்தல்கள்

**சப்பிரகமுவ மாகாண சபை**

2025.01.01 தொடக்கம் 2025.04.30 வரை வருமான செலவின மதிப்பீடு

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் உடைய மாகாண சபை சட்டத்தின் 27(அ) பிரிவின் கீழ் கௌரவ ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் மாகாண சபை நிதியத்திலிருந்து செலவு செய்வதற்காக தயாரிக்கப்பட்டது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவி காலம் 2017 செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை சட்டத்தின் 27(அ) பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அனுமதியளித்தல்.

2025 ஆம் ஆண்டு சனவரி 01 தொடக்கம் ஏப்பிறல் 30 ஆந் திகதி வரையிலான நான்கு மாத கால சேவை செலவினங்களுக்காக ஏற்பாடுகள் செய்வதற்கும், அந்த சேவைச் செலவினங்களுக்கு சப்பிரகமுவ மாகாணத்தினுள் கடன் பெற்றுக்கொள்ள அதிகாரம் வழங்கவும், அந்த நான்கு மாத காலத்தினுள் சப்பிரகமுவ மாகாண சபையின் ஏதேனும் நடவடிக்கைக்காக நிதி ஒதுக்கீடு வழங்கவும், அந்த நடவடிக்கைக்கு செலவு செய்வதற்காக அக்காலத்தில் தேவையான பணத்தை சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது காசாக அல்லது முற்பணமாக கொடுப்பனவு செய்ய இடமளிப்பதும், சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திற்கு அந்த நிதியை மீள செலுத்துவதற்கு ஏற்பாடு; செய்வதும் மற்றும் மேற்கூறிய விடயம் தொடர்பிலோ அல்லது அதற்கு தொடர்புடைய விடயங்களுக்கு ஏற்பாடுகள் செய்வதற்கான ஒரு கட்டளையாகும்.

1A - PG6995 - 09(2025/01)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநராகிய என்னால் பின்வருமாறு விதிக்கப்படுகிறது. இந்த கட்டளை 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபைச் சட்டத்தின் 27(அ) பிரிவின் கீழ் கௌரவ ஆளுநருக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2024, நவெம்பர் 29 ஆந் திகதி அனுமதித்த 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்திற்கான வருமான செலவின மதிப்பீட்டினை திருத்தம் செய்வதற்கான கட்டளையாகும்.

அனுமதி வழங்குதல்.

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் உத்தியோகபூர்வ பதவி காலம் 2017 செத்தெம்பர் 26 ஆம் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை சட்டத்தின் 27(அ) பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2025 சனவரி 01 ஆந் திகதியில் தொடங்கி 2025, ஏப்பிறல் 30 ஆம் திகதியுடன் முடிவடையும் நான்கு மாத காலப் பகுதிக்கான சப்பிரகமுவ மாகாண சபையின் சேவைச் செலவினங்களுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ரூபா இருபத்தியொரு பில்லியன் முன்னூற்றி நாற்பத்தியொரு மில்லியன் நூறு ஆயிரம் (ரூபா 21,341,100,000) ஆகிய சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினங்களை சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து செலவு செய்வதற்கு அந்த மாகாண சபையின் பிரதான செயலாளருக்கும் மற்றும் கணக்கீட்டு அதிகாரிகளுக்கும் இதன் மூலம் அனுமதி வழங்குகிறேன்.

2025 முதல் நான்கு மாதத்திற்கான ஒதுக்கீடு

2. (1). ஏதேனும் தொகையை செலவிட அதிகாரம் வழங்குபவர் வேறு சட்டத்திற்கு பாதிப்பின்றி, இந்த கட்டளையில் “நான்கு மாத காலம்” என்று குறிப்பிடப்பட்டுள்ள, 2025, சனவரி 01 திகதியில் தொடங்கி 2025, ஏப்பிறல் 30 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப் பகுதிக்கான சேவைச் செலவினங்களுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ரூபா இருபத்தியொரு பில்லியன் முன்னூற்றி நாற்பத்தியொரு மில்லியன் நூறு ஆயிரம் (ரூபா 21,341,100,000) ஆகிய சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினங்கள் -

(அ) சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது காசாக அல்லது முற்பணமாக கொடுப்பனவு செய்ய இதன் மூலம் அனுமதி வழங்கப்படும் கொடுப்பனவுகளின் மற்றும்,

(ஆ) சப்பிரகமுவ மாகாணத்தினுள் கடனாக பெற்றுக் கொள்ளப்படும் நிதிகளினால் அல்லது சப்பிரகமுவ மாகாண சபைக்காக பெற்றுக்கொள்ள இதன் மூலம் வழங்கிய அனுமதியுடனான பெற்ற கடன் பணத்தின் மூலமாக மீள்நிரப்பல் செய்தல் வேண்டும். இங்கு மேற் குறிப்பிட்ட ரூபா இருபத்தியொரு பில்லியன் முன்னூற்றி நாற்பத்தியொரு மில்லியன் நூறு ஆயிரம் (ரூபா 21,341,100,000) ஆகிய தொகை இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் உள்ளபடி செலவு செய்யலாம்.

(2) இந்தப் பிரிவின் (I) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய சப்பிரகமுவ மாகாண சபைக்காக மற்றும் அதற்காக கடன் பெற்றுக்கொள்ள வழங்கிய அனுமதி, வேறு எழுத்திலான சட்டத்திற்கு ஏற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத அனுமதியாக இருத்தல் வேண்டும்.

2025 வருடத்தின் முதல் நான்கு மாதத்திற்கு சப்பிரகமுவ மாகாண சபையின் சில நடவடிக்கை களுக்கு நிதி வழங்கல்.

3. (i) 2025 நிதி வருடத்தின் முதல் நான்கு மாத காலப் பகுதியினுள், இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு நடவடிக்கையிலும் சப்பிரகமுவ மாகாண சபைக்கு கிடைக்கும் IV ஆம் நிரலில் உள்ள கிடைப்பனவுகள் அந்த நடவடிக்கையின் கணக்கிற்கு செலவிட வேண்டியதுடன், அவ்வாறு செலவிடப்பட்ட கிடைப்பனவுகளின் மொத்தமானது, IV நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையை விட குறையக் கூடாது.

4. இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு நடவடிக்கை தொடர்பில், 2025 நிதி வருடத்தின் முதல் நான்கு மாத காலப் பகுதியினுள் சப்பிரகமுவ மாகாண சபையினால் செய்கின்ற செலவுகள், அந்தக் காலத்தில் அந்நடவடிக்கைகளினால் சப்பிரகமுவ மாகாண சபைக்கு கிடைக்கும் பெறுவனவுகள் மூலம் கொடுப்பனவு செய்தல் வேண்டும். எனினும், அச்செலவுகள் அந்த அட்டவணையின் V ஆம் நிரலிற்கு தொடர்புடைய குறிப்பில் காட்டப்பட்டுள்ள உச்ச எல்லையை விட மீறக் கூடாது.

5. இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் நடவடிக்கை தொடர்பில், 2025 நிதி வருடத்தின் முதல் நான்கு மாத காலப் பகுதி இறுதியில் நிலுவையாகவுள்ள வரவு மீதி, அந்த அட்டவணையில் VII ஆம் நிரலின் தொடர்புடைய குறிப்பில் காட்டப்பட்டுள்ள உச்ச எல்லையை விட மீறக் கூடாது. மேலும், அந்தக் கால இறுதியில் அந்நடவடிக்கையின் மொத்த பொறுப்புகள் VIII ஆம் நிரலிற்கு தொடர்புடைய குறிப்பில் காட்டப்பட்டுள்ள உச்ச எல்லையை விட மீறக் கூடாது.

6. 2025 நிதி வருடத்தின் ஆரம்ப நான்கு மாத காலப் பகுதியினுள் ஏதேனும் சந்தர்ப்பத்தில் இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV ஆவது நிரலில் காணப்படும் ஏதேனும் நடவடிக்கை மூலம் கிடைக்கும் பெறுவனவுகள், அந்த நடவடிக்கை தொடர்பில், சப்பிரகமுவ மாகாண சபையினால் செய்த செலவுகளை மீள்நிரப்பல் செய்ய போதுமானதாக இல்லாவிடின், அந்த செலவினங்களை நிரப்பல் செய்வதற்காக வேண்டி ஆளுனரினால் கருதும் நிதியை சப்பிரகமுவ மாகாண நிதியத்தினால் அல்லது நிதி முற்பணமாக செலுத்த வேண்டும் என்று அவரது உத்தரவின் மூலம் காலத்திற்கு காலம் கட்டளை பிறப்பிக்க முடியும். எனினும், அவ்வாறு வழங்கப்படும் முற்பண நிதியை முழுமையாக அந்த அட்டவணையின் ஐந்தாவது நிரலின் தொடரான குறிப்பில காட்டப்பட்டுள்ள உச்ச செலவின எல்லையை விட மீறாது இருத்தல் வேண்டும். அந்த நடவடிக்கைக்காக முற்பணமாக வழங்கப்பட்ட நிதி எதுவும், என்னால் உத்தரவு மூலம் கட்டளையிடப்பட்டவாறு சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.

2025 வருடத்தின் முதல் நான்கு மாதத்தினுள் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான செலவினங்களுக்கு சப்பிரகமுவ மாகாண நிதியத்தினால் அல்லது நிதியாக முற்பணமாக செலுத்தல்

7. (I) இந்த கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தலைப்பொன்றுக்குக் கீழுள்ள நிகழ்ச்சித் திட்டமொன்றின் கீழான மீண்டெழும் செலவினங்களுக்கு அந்த அட்டவணையின் ஏற்பாடுகளின் படி, ஒதுக்கீடு செய்யப்பட்டதும், எனினும் செலவிடப்படாத அல்லது பின்னர் செலவாகாது என எதிர்ப்பார்க்கக் கூடியதொரு தொகையை, அதே நிகழ்ச்சித் திட்டத்தின் மூலதன செலவினமாக அல்லது வேறு நிகழ்ச்சித் திட்டத்தின் மீண்டெழும் அல்லது மூலதன செலவினமாகவோ ஒதுக்கீடு செய்வதற்கோ பிரதான செயலாளருக்கு அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு ஒரு அலுவலரது அல்லது விதியின் படி மாற்ற முடியும்.

(2). இந்த கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தலைப்பொன்றுக்குக் கீழுள்ள மூலதன செலவினத்திற்கு ஒதுக்கப்பட்டதொரு தொகையை அதே தலைப்பின் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து அல்லது செயல் திட்டத்திலிருந்து வெளியே மாற்றுவதற்கு பிரதான செயலாளருக்கு மாத்திரமே செய்ய முடியும்.

நிகழ்ச்சித் திட்ட மீண்டெழும் செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட செலவு செய்யப்படாத தொகையை அதே நிகழ்ச்சித் திட்டத்திற்கு வேறு ஒதுக்கீடு செய்ய அல்லது அதே தலைப்பின் கீழான வேறு நிகழ்ச்சித் திட்டத்திற்கோ மாற்றுவதற்கான அதிகாரம்.

8. (1). அதிகாரம் வழங்கப்பட்ட செலவினங்களை செய்வதற்கு வரிகளினாலும் வேறு மூலங்களிலிருந்தும் கிடைக்கும் பெறுவனவுகள், எதிர்பார்த்த அளவை விட குறைவடையக் கூடும் என்று : அல்லது

(2). ஏதேனும் விடயத்திற்கு அல்லது விடயங்களுக்காக ஆரம்பத்தில் ஓதுக்கிய தொகை இனியும் தேவைப்படாது என ஆளுனர் திருப்திப்படும் சந்தர்ப்பத்தில், சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது நிதியங்களிலிருந்து, தன்னால் வெளியிடப்பட்ட ஆணைச்சீட்டு அதிகாரத்தின் கீழ் செலவிடுவதற்காக முன்னர் விடுவிக்கப்பட்ட தொகையை முழுமையாகவோ அகற்றிக் கொள்ள, ஆளுனரினால் செய்து கொள்ள முடியும்.

9. ஆளுனரினால்:-
(அ). இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் V ஆவது நிரலில், VII ஆவது நிரலில் மற்றும் VII நிரலில் குறிப்பிட்டுள்ள உச்ச எல்லைகளில் ஏதேனும் ஒன்றை

(ஆ). இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் VI ஆவது நிரலில் குறிப்பிட்டுள்ள ஆகக் குறைந்த எல்லை:
கட்டளை மூலம் 2026 மே மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், மாற்றுவதற்கோ அல்லது புதுப்பிக்கவோ முடியும்.

இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உச்ச மற்றும் ஆகக் குறைந்த எல்லையை மாற்றுவதற்கு ஆளுனருக்கு உள்ள அதிகாரம்.

இந்த கட்டளையின் கீழ் செய்யப்பட்ட எந்தவொரு விதியும், ஆளுநரினால் அனுமதிக்கப்பட்டாலன்றி, அவற்றை அமுல்படுத்தக் கூடாது.

அவ்வாறு ஏதேனும் கட்டளையை பிறப்பிக்கும் தினமானது, அத்தினத்திற்கு முன்னையதொரு தினத்திலிருந்து அது அமுலாக்கப்பட வேண்டுமென வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருப்பின் அவ்வாறு குறிப்பிடப்பட்ட தினத்திலிருந்து அமுலாக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

10. ஆளுநரினால், எழுத்து மூலமான கட்டளையினால், இந்த கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் உரிய நிரல்களில் ஏதேனும் நடவடிக்கையை சேர்த்துக் கொள்வதன் மூலம் மற்றும் :-

(அ) அந்த நடவடிக்கை தொடர்பிலான அனைத்து உச்ச எல்லைகளை அல்லது அதில் ஏதேனுமொரு எல்லையை.

(ஆ) அந்த நடவடிக்கை தொடர்பிலான ஆகக் குறைந்த எல்லையை சேர்த்துக் கொளவதன் மூலம் அந்த அட்டவணையை திருத்தம் செய்யலாம்.

11. இந்த அனுமதி சப்பிரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7) மாகாண சபை கூட்டத்திற்கு அழைக்கும் தினத்தில் அல்லது மாகாண சபை செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் தினத்தில் இருந்து மூன்று மாத (3) காலம் முடிவடையும் தினத்தில் அல்லது 2025 ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதியில் என்ற இரு தினங்களில் முதலில் வரும் தினத்தில் முடிவடைகிறது.

ஏ.ஏ.சீ.ஜே. ராஜரத்ன,
கௌரவ ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

2024, திசெம்பர் 30.

**முதலாம் அட்டவணை**

மாகாண சபை பொது சேவைகளுக்காக செலுத்த வேண்டிய தொகை தலைப்பு 800 தொடக்கம் 861 வரை

| | |
|---|---|
| மீண்டெழும் செலவினங்கள் | 18,341,100,000 |
| மூலதன செலவினங்கள் | 3,000,000,000 |
| மொத்தம் | 21,341,100,000 |

| *தலைப்பு* | *நிறுவனமும் நிகழ்ச்சித் திட்டமும்* | *மீண்டெழும் செலவினங்கள் ரூபா* | *மூலதன செலவினங்கள் ரூபா* |
|---|---|---|---|
| 800 | கௌரவ ஆளுநர் அலுவலகம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - மாகாண நிர்வாகம் | 42,100,000 | 2,000,000 |
| 801 | மாகாண சபை செயலாளர் அலுவலகம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்; - மாகாண நிர்வாகம் | 84,935,000 | 500,000 |
| 802 | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 22,027,000 | 500,000 |
| 803 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு அலுவலகம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 6,211,000 | - |
| 804 | பிரதான செயலாளர் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 93,815,000 | 201,000,000 |

| *தலைப்பு* | *நிறுவனமும் நிகழ்ச்சித் திட்டமும்* | *மீண்டெழும் செலவினங்கள் ரூபா* | *மூலதன செலவினங்கள் ரூபா* |
|---|---|---|---|
| 805 | பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 22,030,000 | - |
| 806 | பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 26,442,000 | - |
| 807 | பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 28,312,000 | - |
| 808 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | | |
| | 50 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- கட்டுமானம் மற்றும் வீதி பராமரிப்பு | 162,078,000 | - |
| 809 | மாகாண வருமான திணைக்களம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 44,542,000 | - |
| 810 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, போக்குவரத்து, மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடகம் மற்றும் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 76,263,000 | 10,000,000 |
| | 47 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - போக்குவரத்து சேவைகள் | 22,000,000 | 33,000,000 |
| | 49 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - மின்சாரம் மற்றும் எரிசக்தி சேவைகள் | | 21,000,000 |
| | 53 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - கூட்டுறவு அபிவிருத்தி | | 21,000,000 |
| | 60 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - சமூக அபிவிருத்தி | 42,000,000 | 202,000,000 |
| | 61 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - வீடமைப்பு மற்றும் சமூக பொது வசதிகள் | 1,118,000 | 21,000,000 |
| | 63 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தோட்ட வீடமைப்பு | | 45,000,000 |
| | 71 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - வைத்தியசாலை சேவைகள் | 20,900,000 | 288,390,000 |
| | 72 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - பொது சுகாதார சேவைகள் | 20,000,000 | 146,610,000 |
| | 73 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - உள்நாட்டு வைத்திய சேவைகள் | | 105,000,000 |
| | 93 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- சமய மற்றும் கலாச்சார நடவடிக்கை | | - |
| | 96 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - மகளிர் அபிவிருத்தி | | 2,000,000 |

| தலைப்பு | நிறுவனமும் நிகழ்ச்சித் திட்டமும் | மீண்டெழும் செலவினங்கள் ரூபா | மூலதன செலவினங்கள் ரூபா |
|---|---|---|---|
| 811 | சுகாதார திணைக்களம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 167,800,000 | |
| | 71 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- வைத்தியசாலை சேவைகள் | 3,574,920,000 | |
| | 72 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- பொது சுகாதார சேவைகள் | 767,158,000 | |
| 812 | ஆயுர்வேத திணைக்களம் | | |
| | 73 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- உள்நாட்டு வைத்திய சேவைகள் | 328,209,000 | |
| 813 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | | |
| | 53 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- கூட்டுறவு அபிவிருத்தி | 51,112,000 | |
| 814 | உள்ளூராட்சி திணைக்களம் | | |
| | 60 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- சமூக அபிவிருத்தி | 1,220,603,000 | |
| 820 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உல்லாசப் பிராயணத்துறை மற்றும் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - மாகாண நிர்வாகம் | 35,411,000 | - |
| | 50 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - கட்டுமானம் மற்றும் வீதி பராமரிப்பு | 250,000,000 | 250,000,000 |
| | 52 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - பிரதேச அபிவிருத்தி | | 30,000,000 |
| | 90 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- பொழுது போக்கு மற்றும் விளையாட்டு | | 135,000,000 |
| 821 | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | | |
| | 90 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - பொழுது போக்கு மற்றும் விளையாட்டு | 41,905,000 | |
| 830 | சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- மாகாண நிர்வாகம் | 25,625,000 | 7,000,000 |
| | 51 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - கைத்தொழில் அபிவிருத்தி | | 64,500,000 |
| | 60 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - சமூக அபிவிருத்தி | 20,838,000 | 65,500,000 |
| | 95 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - சமூக பாதுகாப்பு | 32,800,000 | 143,000,000 |
| 831 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | | |
| | 51 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - கைத்தொழில் அபிவிருத்தி | 93,214,000 | |
| 832 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | | |
| | 95 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - சமூக பாதுகாப்பு | 215,333,000 | |
| 840 | கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - மாகாண நிர்வாகம் | 68,426,000 | 40,000,000 |

| *தலைப்பு* | *நிறுவனமும் நிகழ்ச்சித் திட்டமும்* | *மீண்டெழும் செலவினங்கள் ரூபா* | *மூலதன செலவினங்கள் ரூபா* |
|---|---|---|---|
| | 80 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - ஆரம்பக் கல்வி | 9,500,000 | 105,000,000 |
| | 81 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - இரண்டாம் நிலைக் கல்வி | 87,600,000 | 515,000,000 |
| | 93 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - சமய மற்றும் கலாசார நடவடிக்கைகள் | 10,835,000 | 25,000,000 |
| 841 | கல்வித் திணைக்களம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - மாகாண நிர்வாகம் | 356,285,000 | |
| | 80 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - ஆரம்பக் கல்வி | 3,380,550,000 | |
| | 81 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - இரண்டாம் நிலைக் கல்வி | 6,425,245,000 | |
| | 87 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - கல்வி பங்கேற்றலை மேம்படுத்தல் | 4,775,000 | |
| | 88 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - கல்வி திட்டமிடல், நிர்வகித்தல் மற்றும் சேவை வழங்கல் | 420,000 | |
| 850 | காணி, மாகாண நீர்பாசன, விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி, கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி விவகார அமைச்சு | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - மாகாண நிர்வாகம் | 28,368,000 | 30,000,000 |
| | 40 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி | | 21,000,000 |
| | 43 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - நீர்பாசன மற்றும் நீர் முகாமைத்துவம் | 25,000,000 | 110,000,000 |
| | 44 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - விவசாய அபிவிருத்தி | | 183,000,000 |
| | 45 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - கால்நடை அபிவிருத்தி | | 153,000,000 |
| | 55 ஆவது நிகழ்ச்சித் திட்டம்- உணவு பாதுகாப்பு மற்றும் பராமரித்தல் | | 24,000,000 |
| 851 | காணி ஆணையாளர் திணைக்களம் | | |
| | 40 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - காணி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி | 52,507,000 | |
| 852 | விவசாய திணைக்களம் | | |
| | 44 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - விவசாய அபிவிருத்தி | 170,916,000 | |
| 853 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | | |
| | 45 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - கால்நடை அபிவிருத்தி | 170,436,000 | |
| 861 | மாகாண உள்ளக கணக்காய்வு திணைக்களம் | | |
| | 03 ஆவது நிகழ்ச்சித் திட்டம் - மாகாண நிர்வாகம் | 10,536,000 | |
| | | **18,341,100,000** | **3,000,000,000** |

**இரண்டாம் அட்டவணை**

2025 - முதல் நான்கு மாதத்திற்கான மதிப்பீடு

முற்பண கணக்கு நடவடிக்கைகள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | *அமைச்சு / திணைக்களம்* *Ministry / Department* | *விடய இல.* | *முற்பண வகை* | *உச்ச செலவு எல்லை* | *ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை* | *வரவு மீதியின் உச்ச எல்லை* | *பொறுப்புக்களின் உச்ச எல்லை* |
| முழு மொத்தம் | | | | 1,050,818,000 | 442,138,000 | 3,246,217,200 | 8,150,000 |
| மாகாண அரச அலுவலர் முற்பணக் கணக்கு | | | | 842,418,000 | 334,324,000 | 3,187,681,200 | |
| 1 | கௌரவ ஆளுநர் அலுவலகம் | 80001 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 600,000 | 200,000 | 2,520,000 | - |
| 2 | மாகாண சபை செயலாளர் அலுவலகம் | 80101 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 1,000,000 | 340,000 | 5,760,000 | - |
| 3 | மாகாண அரச சேவை ஆணைக்குழு அலுவலகம் | 80201 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 1,800,000 | 800,000 | 5,100,000 | - |
| 4 | கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு அலுவலகம் | 80301 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 300,000 | 200,000 | 2,752,000 | - |
| 5 | பிரதான செயலாளர் | 80401 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 4,500,000 | 1,625,000 | 15,125,000 | - |
| 6 | பிரதி பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) | 80501 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 1,000,000 | 250,000 | 3,750,000 | |
| 7 | பிரதி பிரதான செயலாளர் (நிதி முகாமைத்துவம்) | 80601 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 2,000,000 | 800,000 | 1,500,000 | |
| 8 | பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | 80701 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 2,000,000 | 800,000 | 2,200,000 | |
| 9 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியற் சேவைகள்) | 80801 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 15,000,000 | 4,500,000 | 72,700,000 | - |
| 10 | மாகாண வருமான திணைக்களம் | 80901 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 1,300,000 | 800,000 | 4,300,000 | - |
| 11 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, போக்குவரத்து மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல் ஊடாகம் மற்றும் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81001 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 1,250,000 | 875,000 | 30,375,000 | - |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | *அமைச்சு / திணைக்களம்* *Ministry / Department* | *விடய இல.* | *முற்பண வகை* | *உச்ச செலவு எல்லை* | *ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை* | *வரவு மீதியின் உச்ச எல்லை* | *பொறுப்புக்க ளின் உச்ச எல்லை* |
| 12 | சுகாதார திணைக்களம் | 81101 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 200,000,000 | 50,000,000 | 1,262,500,000 | - |
| 13 | ஆயுர்வேத திணைக்களம் | 81201 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 11,000,000 | 4,000,000 | 65,000,000 | - |
| 14 | கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் | 81301 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 5,000,000 | 1,500,000 | 22,000,000 | - |
| 15 | உள்ளூராட்சித் திணைக்களம் | 81401 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 4,000,000 | 1,200,000 | 21,305,000 | - |
| 16 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சு | 82001 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 1,667,000 | 650,000 | 16,363,000 | - |
| 17 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | 82101 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 1,167,000 | 334,000 | 8,834,000 | - |
| 18 | சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | 83001 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 2,820,000 | 1,200,000 | 18,120,000 | - |
| 19 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 83101 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 6,000,000 | 3,000,000 | 31,000,000 | - |
| 20 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | 83201 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 3,000,000 | 1,850,000 | 26,150,000 | - |
| 21 | கல்வி, தகவல் தொழிநுட்பம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | 84001 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 3,200,000 | 700,000 | 23,900,000 | - |
| 22 | கல்வித் திணைக்களம் | 84101 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 555,264,000 | 250,000,000 | 1,407,192,000 | - |
| 23 | காணி, மாகாண நீர்பாசன, விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி, கால்நடை சுகாதாரம் மற்றும் மீன்பிடி விவகார அமைச்சு | 85001 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 1,500,000 | 550,000 | 10,950,000 | - |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | *அமைச்சு / திணைக்களம்* *Ministry / Department* | *விடய இல.* | *முற்பண வகை* | *உச்ச செலவு எல்லை* | *ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை* | *வரவு மீதியின் உச்ச எல்லை* | *பொறுப்புக்களின் உச்ச எல்லை* |
| 25 | விவசாய திணைக்களம் | 85201 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 8,250,000 | 4,250,000 | 76,000,000 | - |
| 26 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் திணைக்களம் | 85301 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 5,000,000 | 2,500,000 | 24,670,000 | - |
| 27 | மாகாண உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் | 86101 | மாகாண அரச அலுவலர் முற்பணம் | 600,000 | 400,000 | 4,465,200 | - |
| | **ஏனைய முற்பணக் கணக்கு** | | | 208,400,000 | 107,814,000 | 58,536,000 | 8,150,000 |
| 28 | மாகாண சபை செயலாளர் அலுவலகம் | 80102 | மந்திரிகளுக்கான பல்வகை முற்பணம் | 26,400,000 | 1,584,000 | 24,816,000 | - |
| 29 | முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி மத்திய நிலையம் - புஸ்ஸல்ல | 80502 | பயிற்சி மத்திய நிலைய முற்பணக் கணக்கு | 20,000,000 | 22,000,000 | 1,000,000 | 350,000 |
| 30 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, சுகாதார மற்றும் உள்நாட்டு வைத்தியம், மகளிர் விவகாரம், கூட்டுறவு வியாபாரம் மற்றும் உணவு, போக்குவரத்து, மற்றும் தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடகம் மற்றும் வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81004 | சப்பிரகமுவ மாகாண நாடக அரங்கு முற்பணக் கணக்கு | 1,500,000 | 500,000 | 1,050,000 | - |
| 31 | ஆயுர்வேத திணைக்களம் | 81202 | பின்னவல பஞ்சகாம மத்திய நிலையம் | 500,000 | 230,000 | 170,000 | 300,000 |
| 32 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 83102 | நெசவு கைத்தொழில் வேலைத்தள தாபித்தலும் நிர்வகித்தலும் | 60,000,000 | 30,000,000 | 15,000,000 | 2,000,000 |
| 33 | கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 83103 | சிறு கைத்தொழில் வேலைத்தள தாபித்தலும் நிர்வகித்தலும் | 20,000,000 | 8,000,000 | 8,000,000 | 1,000,000 |

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | *அமைச்சு / திணைக்களம்* *Ministry / Department* | *விடய இல.* | *முற்பண வகை* | *உச்ச செலவு எல்லை* | *ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை* | *வரவு மீதியின் உச்ச எல்லை* | *பொறுப்புக்களின் உச்ச எல்லை* |
| 34 | கல்வி, தகவல் தொழிநுட்பம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | 84002 | மெனேரிபிடிய அட்டுழுகம கல்வி அபிவிருத்தி மத்திய நிலைய முற்பணக் கணக்கு | 40,000,000 | 15,000,000 | 5,000,000 | 500,000 |
| 35 | விவசாயத் திணைக்களம் | 85202 | Argi Fresh விற்பனை நிலைய நடவடிக் கையை நடாத்திச் செல்வதற் கான வாணிப முற்பணக் கணக்கு | 8,000,000 | 3,000,000 | 1,000,000 | 500,000 |
| 36 | விவசாயத் திணைக்களம் | 85203 | ரஜவக விவசாய சேவை பயிற்சி நிலைய முற்பணக் கணக்கு | 5,000,000 | 2,500,000 | 1,000,000 | 500,000 |
| 37 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 85302 | உந்துகொட விலங்கு கட்டுப்பாட்டு மற்றும் பயிற்சி மத்திய நிலையம் முற்பண கணக்கு | 16,000,000 | 12,000,000 | 500,000 | 2,000,000 |
| 38 | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் | 85303 | இரத்தினபுரி விலங்கு வைத்தியசா லைக்கான வாணிப முற்பணக் கணக்கு | 11,000,000 | 13,000,000 | 1,000,000 | 1,000,000 |

**அதிகார பலம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவி காலம் 2017, செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை சட்டத்தின் 27(அ) பிரிவின்படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இந்த மாகாண சபையின் 2025, சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பித்து 2025, ஏப்பிறல் 30 ஆம் திதியுடன் முடிவடையும் நான்கு மாத காலப் பகுதிக்கான சப்பிரகமுவ மாகாண சபையின் சேவைச் செலவினங்களுக்கு தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ரூபா இருபத்தியொரு பில்லியன் முன்னூற்று நாற்பத்தியொரு மில்லியன் நூறு ஆயிரம் (ரூபா 21,341,100,000) ஆகிய சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினங்களை சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து செலவு செய்வதற்கு அந்த மாகாண சபையின் பிரதான செயலாளருக்கும் மற்றும் கணக்கீட்டு அதிகாரிகளுக்கும் இதன் மூலம் அனுமதி வழங்குகிறேன்.

இந்த அனுமதி சப்பிரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7 ஆவது) மாகாண சபை கூட்டத்திற்கு அழைக்கும் தினத்தில் அல்லது மாகாண சபை செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் தினத்தில் இருந்து மூன்று மாத (3) காலம் முடிவடையும் தினத்தில் அல்லது 2025, ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி என்ற இரண்டு தினங்களில் முதலில் வரும் தினத்தில் முடிவடைக்கிறது.

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க கொண்ட மாகாடை சபைச் சட்டத்தின் 27(அ) பிரிவின் கீழ் கௌரவ ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2024, நவெம்பர் 29 ஆம் திகதி அனுமதித்த 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்திற்கான வருமான செலவின மதிப்பீடு இதனடிப்படையில் திருத்தப்படுகிறது.

ஏ.ஏ.சீ.ஜே. ராஜரத்ன,
கௌரவ ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

2024, திசெம்பர் 30.

EOG 01-0112/2

---

**அதிகார பலம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாவது (6) மாகாண சபையின் பதவி காலம் 2017, செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அன்று முடிவடைந்ததால், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க கொண்ட மாகாண சபை சட்டத்தின் 27(அ) பிரிவின் படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் 2025, சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பித்து 2025, ஏப்பிறல் 30 ஆம் திகதியுடன் முடிவடையும் நான்கு மாத காலப் பகுதிக்கு சப்பிரகமுவ மாகாண சபையின் முற்பண கணக்கு நடவடிக்கைகளுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்ட இதன் இரண்டாம் (II) அட்டவணையிலுள்ள செலவினங்களை சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து செலவு செய்வதற்கு அந்த மாகாண சபையின் பிரதான செயலாளருக்கும் மற்றும் கணக்கீட்டு அதிகாரிகளுக்கும் இதன் மூலம் அனுமதி வழங்குகிறேன்.

இந்த அனுமதி சப்பிரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7 ஆவது) மாகாண சபை கூட்டத்திற்கு அழைக்கும் தினத்தில் அல்லது மாகாண சபை செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் தினத்தில் இருந்து மூன்று மாத (3) காலம் முடிவடையும் தினத்தில் அல்லது 2025, ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி என்ற இரண்டு தினங்களில் முதலில் வரும் தினத்தில் முடிவடைக்கிறது.

ஏ.ஏ.சீ.ஜே. ராஜரத்ன,
கௌரவ ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

2024, திசெம்பர் 30.

EOG 01-0112/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.